மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. அறிவிப்பு

'காகிதமில்லா சட்டமன்றம்' எனும் இலக்கினை எய்திடும் வகையில் 2019–2020 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது அளிக்கப்பட்டவற்றுள் அனுமதிக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் மென்பொருள் வடிவில் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், சம்பந்தப்பட்ட துறைகளுக்கும் மின்னஞ்சல்மூலம் அனுப்பப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. காகிதம் இல்லா சட்டமன்றம் என்ற நிலையினை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் தொடர்ச்சியாக 2019–2020 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது மாண்புமிகு உறுப்பினர்களால் அளிக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் தொகுத்து தயார் செய்யப்பட்டு அவற்றின் 5 பிரதிகள் மானியக் கோரிக்கைகள் எடுக்கப்பெறும் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்படும். அவற்றின் மென்பொருள் நகல் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், சம்பந்தப்பட்ட துறைகளுக்கும் முன்னதாகவே மின்னஞ்சல்மூலம் அனுப்பி

வைக்கப்படும். அச்சிட்ட பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இனி அனுப்பப் பெறாது என்பதைப் பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

7. மானியக் கோரிக்கைகள், 2019–2020, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

(ஆ) கோரிக்கை எண் 42–ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

(இ) கோரிக்கை எண் 53–சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை

(அ) கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2019–2020 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 34–நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

“நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை பற்றிய 34 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.10,698,42,83,000/, மூலதனக் கணக்கில் ரூ.7,482,90,11,000/– மற்றும் கடன் கணக்கில் ரூ.519,31,08,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்”

எனக் கோருகிறேன்.